# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.70/மா/2025
நாள் 19.08.2025

திரு. R. காதர்,
வேலூர். — முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
வேலூர் மாநகராட்சி. — எதிர் மனுதாரர்

வேலூர்–1, இக்ரா பள்ளி அருகில், சின்ன அல்லாபுரம் மெயின் ரோடு, கதவு எண் 18/A1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. காதர் என்பவரின் 26.12.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.12.2024 அன்று பெறப்பட்டு 70/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

வேலூர்–1, இக்ரா பள்ளி அருகில், சின்ன அல்லாபுரம் மெயின் ரோடு, கதவு எண் 18/A1 என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. காதர் என்பவர் 26.12.2024 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"வேலூர் மாநகராட்சி மண்டலம் 3, 4 பகுதிகளில் எட்டு மாதங்களுக்கு முன் அமைக்கப்பட்ட சாலைகள் உடைந்தும், அதிக அளவில் குண்டும் குழியுமாக மாறி உள்ளது. புதிதாக அமைக்கப்பட்ட தார் சாலைகள் குண்டும், குழியுமாக மாறி உள்ளதால், அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு அதிக அளவில் மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

புதிதாக அமைந்த சாலைகள் அனைத்தும் பொதுமக்கள் பயன்படுத்தாத நிலையில் உள்ளது. தரமற்ற சாலை அமைத்த அதிகாரிகள் பொறியாளர் மீது நடவடிக்கை எடுக்கவும் மீண்டும் தரமாக உள்ள சாலை அமைக்கவும் நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறோம்.

வேலூர் மாநகராட்சியில் உடனடியாக ஊழல், முறைக்கேடு, நிர்வாக சீர்கேடு ஒழித்து, ஊழல் லஞ்சத்தை ஒழித்து, நம் நாட்டை காப்பாற்றுமாறு கேட்டுக் கொள்கிறோம். மக்களின் வரி பணத்தை சம்பளமாக பெற்று கொண்டு பொதுமக்களின் வரி பணத்தை வீணாக்கிய கடமை தவறிய அனைத்து அதிகாரிகள் மீது துறை நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன்.

கோரிக்கை

(1) ஊழல் செய்த வேலூர் மாநகராட்சி அதிகாரியின் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன்.

(2) ஊழலில் சம்பாதித்த சொத்துகளை அரசு கைப்பற்றவும்

(3) அபராத தொகையுடன் மீண்டும் அனைத்து இடங்களிலும் தரமான சாலை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.'' எனத் தெரிவித்து, கீழ்க்கண்ட இடங்களையும் குறிப்பிட்டுள்ளார்:

வேலூர் மாநகராட்சி மண்டலம் 4
வார்டு 40, 41

1. கஸ்பா பகுதி, பயர்லைன் தெரு.
2. வார்டு 43, R.N. Palayam

வேலூர் மாநகராட்சி மண்டலம் 3
வார்டு 40, 41

1. ஆபிஸர் லைன்ஸ் பழைய அரசு மருத்துவமனை ரோடு
2. தியாகராஜபுரம் கனரா வங்கி ரோடு

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 13.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் வேலூர் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் ஆணையரிடமிருந்து பெறப்படவில்லை.

3. வேலூர் மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி ஆணையாளர் மனுதாரருக்கு முகவரியிட்டு, இம்முறைமன்ற நடுவத்திற்கு நகலிட்ட கடித ந.க. எண் 731/2025/இ1/மஅ4, நாள் 07.07.2025–ல் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"வேலூர் மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண் 41, 43, கஸ்பா பையர் லைன் மற்றும் ஆர். என். பாளையம் பகுதியில் அமைக்கப்பட்ட சாலைகள் நல்ல நிலையில் உள்ளது என தெரிவிக்கப்படுகிறது.'' என தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 09.07.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.07.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 09.07.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"(1) வேலூர் மாநகராட்சி மண்டலம் 3 மற்றும் 4 பகுதிகளில், 8 மாதங்களுக்கு முன் அமைக்கப்பட்ட சாலைகள் உடைந்தும், அதிக அளவில் குண்டும், குழியுமாக மாறி உள்ளது. புதிதாக அமைக்கப்பட்ட தார் சாலைகள் குண்டும், குழியுமாக மாறி உள்ளதால், அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு அதிக அளவில் மக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

(2) புதிதாக அமைந்த சாலைகள் அனைத்தும் பொதுமக்கள் பயன்படுத்தாத நிலையில் உள்ளது.

(3) எனவே, மேற்கண்ட புகார் குறித்து ஒரு குழு அமைத்து அக்குழுவில் என்னையும் ஒரு உறுப்பினராக சேர்த்து கள ஆய்வு செய்யவும், சாலைப் பணிகளை சரியாக செய்யாத ஒப்பந்தாரர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், ஒப்பந்ததாரர் மீண்டும் ஒப்பந்தம் எடுக்காதவகையில் நடவடிக்கை எடுக்கவும், மேலும் அனைத்து சாலைகளையும் தரமான முறையில் அமைக்கவும், கடமை செய்ய தவறிய அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், மேற்கண்ட சாலைப் பணிகளை நிறைவேற்றிட காலகெடுவினை நிர்ணயம் செய்யவும் மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''

6. வேலூர் மாநகராட்சி மண்டலம் 4ன் இளநிலை பொறியாளர் (பொ) 09.07.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"வேலூர் மாநகராட்சியில் மண்டலம் 3–க்கு உட்பட்ட தியாகராஜபுரம், கனரா வங்கி ரோட்டில் (ரிஜிஸ்டர் பெரியசாமி தெரு) பாதாள சாக்கடை திட்டத்தால் பழுதடைந்த சாலையினை 15வது நிதிக் குழு திட்டத்தின் கீழ் புதிய சிமெண்ட் சாலைகள் அமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது என மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்".

7. மேலும் வேலூர் மாநகராட்சி மண்டலம் 3–ன் உதவி ஆணையர் அவர்கள் தனது 25.7.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்ட கூடுதல் விவரத்தை தெரிவித்துள்ளார் :–

"வேலூர் ஆபீசர்ஸ் லைன் பழைய மருத்துவமனை ரோடு மற்றும் தியாகராஜபுரம் கனரா வங்கி ரோடு பகுதியில் புதியதாக சாலை அமைக்கப்பட்டது. இதற்கான பணித்தல புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளது".

8. மனுதாரரின் மனு, வாக்குமூலம், வேலூர் மாநகராட்சி மண்டலம் 4ன் உதவி ஆணையாளர் மனுதாரருக்கு முகவரியிட்டு, இம்முறைமன்ற நடுவத்திற்கு நகலிடப்பட்ட கடிதம் மற்றும் மண்டலம் 3–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர், தனது மனு மற்றும் வாக்குமூலத்தில், வேலூர் மாநகராட்சி, மண்டலம் 3 (1. ஆபீஸர் லைன்ஸ், பழைய அரசு மருத்துவமனை ரோடு, 2. தியாகராஜபுரம், கனரா வங்கி ரோடு) மற்றும் மண்டலம் 4 (வார்டு 40, 41 – கஸ்பா பகுதி பயர்லைன் தெரு, வார்டு 43 R.N. Palayam) ஆகிய மண்டலப் பகுதிகளில், 8 மாதங்களுக்கு முன் புதிதாக அமைக்கப்பட்ட தார் சாலைகள் உடைந்தும், அதிக அளவில் குண்டும், குழியுமாக மாறி உள்ளதால், அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டு அதிக அளவில் மக்கள் பாதிக்கப்பட்டு வருவதாகவும், புதிதாக அமைத்த சாலைகள் அனைத்தும் பொதுமக்கள் பயன்படுத்தாத நிலையில் உள்ளது என்பதும், எனவே, மேற்கண்ட புகார் குறித்து ஒரு குழு அமைத்து அக்குழுவில் தன்னையும் ஒரு உறுப்பினராக சேர்த்து கள ஆய்வு செய்யவும், சாலைப் பணிகளை சரியாக செய்யாத ஒப்பந்தாரர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், ஒப்பந்ததாரர் மீண்டும் ஒப்பந்தம் எடுக்காதவகையில் நடவடிக்கை எடுக்கவும், அனைத்து சாலைகளையும் தரமான முறையில் அமைக்கவும், கடமை செய்ய தவறிய அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும் கோரியிருப்பது அறிய முடிகிறது.

வேலூர் மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண் 41, 43–ல் கஸ்பாபையர் லைன் மற்றும் ஆர். என். பாளையம் பகுதியில் அமைக்கப்பட்ட சாலைகள் நல்ல நிலையில் உள்ளது என்பதும், மண்டலம் 3–க்கு உட்பட்ட தியாகராஜபுரம் கனரா வங்கி ரோட்டில் (ரிஜிஸ்டர் பெரியசாமி தெரு) பாதாள சாக்கடை திட்டத்தால் பழுதடைந்த சாலையினை 15வது நிதிக் குழு திட்டத்தின் கீழ் புதிய சிமெண்ட் சாலைகள் அமைக்கப்பட்டு நல்ல நிலையில் உள்ளது என்பதும், வேலூர் மாநகராட்சி மண்டலம் 4–ன் உதவி ஆணையாளர் மனுதாரருக்கு முகவரியிட்டு இம்முறைமன்ற நடுவத்திற்கு நகலிடப்பட்ட கடிதம் மற்றும் மண்டலம் 3–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், வேலூர் மாநகராட்சி, மண்டலம்–4, வார்டு எண் 41, 43–ல் கஸ்பாபையர் லைன் மற்றும் ஆர். என். பாளையம் பகுதியில் அமைக்கப்பட்ட சாலைகளும் மற்றும் மண்டலம் 3–க்கு உட்பட்ட தியாகராஜபுரம் கனரா வங்கி ரோட்டில் (ரிஜிஸ்டர் பெரியசாமி தெரு) பாதாள சாக்கடை திட்டத்தால் பழுதடைந்த சாலையினை 15வது நிதிக் குழு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட புதிய சிமெண்ட் சாலைகளும் நல்ல நிலையில் உள்ளதாக தெரிவித்து இருந்தாலும்,

மேற்கண்ட சாலை மற்றும் மண்டலம் 3–ல் ஆபிஸர் லைன்ஸ் பழைய அரசு மருத்துவமனை மற்றும் இப்புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள இதர சாலைகளின் தரம் குறித்து கள ஆய்வு செய்வதற்கு அண்ணா பல்கலைக் கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளில் பணியாற்றும் பொறியியல் பேராசிரியர் உள்ளடக்கிய ஒரு குழு அமைத்து, அக்குழுவின் அறிக்கை பெற்று, அதனடிப்படையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள மண்டலம் 3 மற்றும் 4–ன் உதவி ஆணையருக்கு உத்திரவிடுமாறு வேலூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும் ஒப்பந்ததாரர்கள், அவர்களுக்கு ஒதுக்கப்படும் பணிகளை அரசு வழிகாட்டுதலின்படி ஒப்பந்த பணிகளை தரமாக மேற்கொள்கிறார்களா என்பதை அந்தந்த பகுதி அலுவலர்களை கொண்டு தொடர்ந்து கண்காணித்திடவும் அறிவுறுத்துமாறு வேலூர் மாநகராட்சி ஆணையரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு R. காதர்,
கதவு எண் 18/A1
சின்ன அல்லாபுரம் மெயின் ரோடு,
இக்ரா பள்ளி அருகில்,
வேலூர்–1.

(2) ஆணையர்,
வேலூர் மாநகராட்சி,
வேலூர்.

(3) உதவி ஆணையாளர்,
மண்டலம் 3 மற்றும் 4,
வேலூர் மாநகராட்சி,
வேலூர்.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 0028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
வாய்மையே வெல்லும்
சென்னை–600 032

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

21/8/25
செயலாளர்.
21.8.25